Register No. [ ]

**FA4D**

**5211–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Second Year – Fourth Semester

LAW OF CONTRACTS — II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain "Nemo dat quod non habet" and state the exceptions.

   "ஒருவர் தான் பெற்ற உரிமை மூலத்தைக் காட்டிலும் மிகுதியான உரிமை மூலத்தை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது" என்பதை சரக்கு விற்பனை சட்டத்தின் கீழ் விதிவிலக்குகளுடன் எழுதுக.

2. Explain agency by ratification and state the requisites of a valid ratification.

   பின் ஏற்பு முகவரியம் என்பதை விளக்குக மற்றும் அதனை சட்டப்படி செல்லத்தக்க ஒன்றாக ஆக்குவதற்கு தேவையான கூறுகளைக் குறிப்பிடவும்.

3. Discuss the powers and functions of Consumer Dispute Redressal agencies.

   நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்களின் அதிகாரங்களையும் பணிகளையும் விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define contract of guarantee and explain the differences between contract of indemnity and guarantee.

   பொறுப்புறுதி ஒப்பந்தம் என்பதை வரையறை செய்து ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

5. Explain the mutual rights and liabilities of partners.

கூட்டாளிகளுக்கு இடையே உள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் விளக்குக.

6. "Delegatus non potest delegare" - Explain.

"அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" - விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Defect in goods

பொருட்களின் குறைபாடு

(b) Pledge is a special form of Bailment.

அடகு என்பது ஒரு சிறப்பு வகை ஒப்படைவே ஆகும்.

(c) Continuing guarantee

தொடர் பொறுப்புறுதி

(d) Rights of an Agent

முகவரின் உரிமைகள்

(e) Doctrine of Caveat Emptor

வாங்குபவனே விழித்திரு என்னும் கோட்பாடு

(f) Rights of unpaid vendor

விலை பெறா விற்பனையாளரின் உரிமைகள்

(g) Minor partner

இளவர் கூட்டாளி.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a customer in B's shop put down a gold brooch with her coat and forgot to take it. One of the assistants found it and it was placed in a drawer over week end on the next day it was found missing. Discuss the liability of 'B'.

'B'-யின் கடையில் 'A' என்கிற ஒரு வாடிக்கையாளர் தனது கோட்டுடன் ஓர் தங்க ஆடை ஊக்கினை வைத்து விட்டு எடுத்தும் செல்ல மறந்து விடுகிறார். 'B'-யின் உதவியாளர்களில் ஒருவர் வார இறுதியில் அதைக் கண்டெடுத்து ஓர் அறையில் வைக்கிறார். அடுத்த நாள் அது காணாமல் போனது தெரிய வருகிறது. 'B'-யின் பொறுப்பு நிலையை விவாதிக்க.



9. 'A' goes to shop of 'B' and agrees to purchase some ready made uniform and take delivery of the same the next day. The uniform are destroyed in fire on the same day night. Who should bear the loss - Decide.

'B' என்பவரின் கடைக்கு 'A' என்பவர் சென்று சில ரெடிமேட் சீருடைகள் வாங்குவதற்கும் அவற்றை அடுத்த நாள் டெலிவரி எடுத்துக் கொள்வதாகவும் உடன்பாடு செய்து கொள்கிறார். ஆனால் அதே நாள் இரவு அச்சீருடைகள் ஒரு தீ விபத்தில் எரிந்து விடுகின்றன. இழப்பை யார் ஏற்றுக் கொள்வது? விவாதிக்க.

10. 'A' bought milk from 'B'. The milk contains harmful germs. A's wife took the milk, got infection and as a result died. A sues B - Decide.

'B'யிடமிருந்து 'A' என்பவர் பால் வாங்கினார். அதில் வியாதியைப் பரப்பும் கொடிய கிருமிகள் இருந்தன. 'A'யின் மனைவி அப்பாலை அருந்தியதால், நோய்வாய்ப்பட்டு அதனால் இறந்துவிட்டார். 'B' மீது 'A' வழக்கிடுகிறார். தீர்க்க.

———